**கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2010 ஆம் ஆண்டு**

---

இவ்வறிக்கை இரண்டு பகுதிகளுடன் கூடியவை.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டு தலைப்பிற்குரிய விரிவான அறிக்கை

## 1 ஆம் பகுதி

**கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

1 **அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள்**

| செலவினத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 295 | வர்த்தகத் திணைக்களம் |
| 297 | கம்பனிப் பதிவாளர் திணைக்களம் |
| 299 | தேசிய புலமைச் சொத்து அலுவலகம் |
| 303 | புடவைக் கைத்தொழில் திணைக்களம் |

2 **வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நான்கு திணைக்களங்களினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் கணக்காண்டின் ஆரம்பத்தின் போதே தயாரிக்கப்பட்டிருந்தது.

## 3 கணக்குகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான 4 திணைக்களங்களுக்குரிய 05 ஒதுக்கீட்டுக் கணக்குகள் 2011 மார்ச் 31 ஆம் திகதி வரையில் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான 4 திணைக்களங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 2,197,850,000 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 1,814,526,569 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சினதும் திணைக்களங்களினதும் தேறிய நிதிஏற்பாட்டிலிருந்து சேமிப்புக்கள் ரூபா 1,396,417 இற்கும் ரூபா 352,346,301 இற்கும் இடைப்பட்ட அளவிலான வீச்சில் அதாவது மொத்த தேறிய நிதிஏற்பாட்டின் நூற்றுக்கு 0.06 முதல் நூற்றுக்கு 23 இற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | தேறிய ஏற்பாடு | | பயன்பாடு | | சேமிப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | மீண்டெழுபவை ரூபா | மூலதனம் ரூபா | மீண்டெழுபவை ரூபா | மூலதனம் ரூபா | மீண்டெழுபவை ரூபா | மூலதனம் ரூபா |
| 149 | கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு | 552,080,000 | 992,893,000 | 453,082,707 | 739,543,992 | 98,997,293 | 253,349,008 |
| 295 | வர்த்தகத் திணைக்களம் | [redacted] | | | | | |
| 297 | கம்பனிப் பதிவாளர் திணைக்களம் | | - | [redacted] | - | | - |
| 299 | தேசிய புலமைச் சொத்து அலுவலகம் | 16,360,000 | - | | | [redacted] | - |
| 303 | புடவைக் கைத்தொழில் திணைக்களம் | | | 49,860,371 | 18,808,138 | | |
| | மொத்தம் | | [redacted] | -- 611,817,174 | | | 1,441,605 |
| | | ========= | ========= | ======== | ========= | ========= | ========= |

## 3.2 வருமானக் கணக்கு

### (அ) கணக்குளைச் சமர்ப்பித்தல்

அமைச்சின் கீழ் வரும் திணைக்களமொன்றிற்குரிய 2010 ஆம் ஆண்டிற்கான 02 வருமானக் குறியீடுகளுக்குரித்தாக தயாரிக்கப்பட வேண்டிய வருமானக் கணக்குகளின் எண்ணிக்கை 02 ஆகும். 2011 மார்ச் 31 ஆம் திகதி வரையில் 02 வருமானக் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்**

அமைச்சின் கீழான திணைக்களம் ஒன்றினால் 2010 ஆம் ஆண்டின் போது 02 வருமானக் குறியீடுகளிற்காக ரூபா 43.3 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், ரூபா 57.9 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 14% இற்கும் 34% இற்கும் இடைப்பட்ட சதவீதத்தில் வருமானம் கூடுதலாகச் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | மதிப்பீடு செய்யப்பட்டவை | உள்ள வாறானவை | கூடுதலாக சேகரித்தல் | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | [redacted] |
| கம்பனிப் பதிவாளர் நாயகம் | 20.03.20.10 | 42,000,000 | 56,504,525 | 14,504,525 | 34.53 |
| கம்பனிப் பதிவாளர் நாயகம் | 20.03.20.12 | 1,300,000 | 1,482,000 | 182,000 | 14 |
| | | 43,300,000 | 57,986,525 | 14,686,525 | 34 |

## 3.3 முற்பணக் கணக்குகள்

### 3.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான 02 திணைக்களங்களினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட வேண்டிய 03 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் 2011 மார்ச் 31 ஆம் திகதி வரையில் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், கீழே காட்டப்பட்டுள்ள முற்பணக் கணக்குகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை..

## 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்கள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

## 1.4 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| பதவியினர் வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | நிறைவேற்று மட்டம் | 78 | 68 | 10 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 175 | 148 | 27 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 99 | 93 | 06 | - |
| (iv) | ஏனைய(அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை | - | 09 | - | 09 |
| | மொத்தம் | 352 | 318 | 43 | 09 |

## 2.1 ஒதுக்கீட்டு தலைப்பு 295 - வர்த்தக திணைக்களம்

வர்த்தகத் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 நவம்பர் 21 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர்களினது பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தர்களினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் அல்லது இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்புக்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(i) 2009 பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 22 அச்சீட்டு இயந்திரங்கள் காணப்பட்ட போதும், 2010 பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அச்சிட்டு இயந்திரங்கள் 21 ஆகக் பதியப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 967 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச்சீட்டின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அச்சீட்டு இயந்திரம் உட்பட இரண்டு அச்சீட்டு இயந்திரங்கள் குறைவாக மெய்மையாய்வு அறிக்கையில் காட்டப்பட்டிருந்தன.

(ii) 03 சீடிஎம்ஏ வயர்களைக் கொண்டிராத தொலைபேசிகள் 2009 பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் 2010 பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் அதில் ஒன்று குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.5 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (i) நிதிப் பிரமாணம்<br>இலக்கம் 880 | அரசின் நிதியை பொறுப்பேற்றல் அல்லது பொறுப்பாக இருத்தல் தொடர்பாக பொறுப்பாக இருக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் அரசின் கணக்கிற்குரிய உறுசிச் சீட்டுக்களை |

உறுதிப்படுத்துகின்ற, காசோலைகளில் கையொப்பமிடுபவர்களும் நேர்மையாக கடமைகளை நிறைவேற்றுவதாக பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், நிதிக்குப் பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து அவ்வாறு பிணை வைப்புப் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(ii) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஒவ்வொரு 06 மாதத்திற்கு ஒருமுறை வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தால் ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

(iii) திறைசேரிச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணனிகள் கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.6 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | நிறைவேற்று மட்டம் | 58 | 45 | 13 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 03 | 01 | 02 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 66 | 40 | 26 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 19 | 16 | 03 |
| | மொத்தம் | 146 | 102 | 44 |

வர்த்தகத் திணைக்களத்தினால் வெளிநாட்டு வியாபார கொள்கைகளை உருவாக்குதல், உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களை வழங்குதல், வெளிநாட்டு தூதுவராகச் செயற்படல், தங்குமிட வீசா வசதிகளைப் பெற்றுக்கொள்ள வசதிகளை ஏற்படுத்தல் போன்ற அதிகளவிலான செயற்பாடுகளை நிறைவேற்றும் அரசின் திணைக்களமொன்றாகும். திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கைக்கு ஒப்பாக 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 44 ஆக இருந்தது. அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 30% ஆக இருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக போதியளவில் பதவியணியினர் இல்லாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

i. கம்பனிச் சட்டத்தின் 131 (1) மற்றும் (2) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கம்பனியினாலும் ஆகக் குறைந்தது ஒவ்வொரு ஆண்டுக்கு ஒருமுறை ஆண்டறிக்கையைப் பதிவாளருக்கு ஒப்படைக்க வேண்டும். ஆண்டிற்கான கூட்டம் அவ் ஆண்டின் பங்குதாரருக்கான ஒரே கூட்டமாக இருப்பதால் அக்கூட்ட தினத்திலிருந்து 30 வேலை நாட்களுக்குள் ஆண்டறிக்கையைப் பதிவாளருக்கு ஒப்படைக்க வேண்டும். எனினும் தெரிவு செவ்வை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 30 கம்பனிகளின் கோவைகளில் 12 கம்பனி கோவைகளில் 2007,2008,2009 மற்றும் 2010 ஆண்டுகளிற்காக ஆண்டறிக்கைகள் கம்பனிப் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ii கம்பனிச் சட்டத்தின் 131 (4) பிரிவின் பிரகாரம் மேலே குறிப்பிட்டதன் பிரகாரம் அறிக்கை சமர்ப்பிக்காத சந்தர்ப்பத்தில் குறித்த கம்பனி மற்றும் உத்தியோகத்தர்கள் குற்றவாளியாகக் கருதப்படுவதுடன், தண்டப்பணத்திற்கும் உட்படுவார்கள் என அறிவிக்கப்பட்டிருந்த போதும், ஆண்டறிக்கையை சமர்ப்பிக்காத கம்பனிகளுக்கு ஆண்டறிக்கையை சமர்ப்பிக்குமாறு அறிவித்தலொன்று கூட மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

iii கம்பனிச் சட்டத்தின் 133 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியொன்று உருவாக்கப்பட்டு 18 மாதங்களுக்குள் ஆண்டுப் பொதுக் கூட்டத்தை நடாத்த வேண்டியதுடன், அக்கூட்டம் நடைபெற்று 30 நாட்களுக்குள் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், தெரிவுப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட 12 கம்பனிகளில் 06 கம்பனிகள்

பதிவுசெய்யப்பட்டதன் பின்னர் ஒரு ஆண்டறிக்கையேனும் கம்பனிப் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

iv. கம்பனிச் சட்டத்தின் 487(5) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனிகளின் பெயர்களை கம்பனிப் பதிவாளர் நீக்கும் சந்தர்ப்பத்தில் அப்பெயர் நீக்கப்படும் திகதிக்கு முன்னர் கம்பனியிடமிருந்த அல்லது அக்கம்பனிக்காக பொறுப்பாக செய்யப்படுகின்ற எத்தகைய அல்லது சகல ஆதனங்களும் அரசிற்கு உரித்தாக இருக்க வேண்டியதும் அரசின் விருப்பிற்குரியதாக இருக்க வேண்டும் என காட்டப்பட்டுள்ளது. எனினும் பெயர் பதிவழிக்கப்பட்ட 36,097 கம்பனிகளின் சொத்துக்கள் தொடர்பாக திணைக்களத்திடம் தகவல்கள் காணப்படாததுடன், கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் பெயர் நீக்கப்பட்ட கம்பகளின் சொத்துக்களை அரசுடமையாக்குவது தொடர்பாக திணைக்களத்தினால் போதியளவு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2010 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்திற்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்கான பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் விலைகோரல்கள் கோரப்பட்டிருந்ததுடன், கொள்வனவுச் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் தனியார் கம்பனியொன்றுக்கு 2010 பெப்ரவரி 01 ஆம் திகதியிலிருந்து பாதுகாப்புச் சேவை ஒப்படைக்கப்பட்டிருந்தது. திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட சேவை நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு தவறியமையால் 2010 செப்தம்பர் 30 ஆம் திகதி அந்நிறுவனத்தின் சேவை இடைநிறுத்தப்பட்டு 2010 ஒக்தோபர் 01 திகதி முதல் வேறொரு தனியார் கம்பனிக்கு பாதுகாப்பு சேவையை வழங்குவதற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவ்விரண்டு நிறுவனங்களுடனும் பாதுகாப்பு சேவை வழங்குவதற்குரிய முறையான உடன்படிக்கையொன்றை மேற்கொள்ளாமைக்கு நடவடிக்கை எடுக்கப்படாமல், அவ்விரண்டு கம்பனிக்கும் ஆண்டினுள் ரூபா 2,954,435 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| i. | நிறைவேற்று மட்டம் | 07 | 07 | - | - |
| | மூன்றாம் நிலை மட்டம் | 02 | 02 | - | - |
| | இரண்டாம் மட்டம் | 64 | 48 | 16 | - |
| | ஆரம்ப மட்டம் | 21 | 19 | 02 | - |
| | ஏனைய(அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை | - | 15 | - | 15 |
| | மொத்தம் | 94 | 91 | 18 | 15 |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலாக 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தை செயற்படுத்தும் போது மேலதிக வேலைகளுக்காக 2008 யூன் 02 ஆம் திகதி முதல் அவ்வப்போது ஒப்பந்த அடிப்படையில் 15 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். மேற்படி ஒப்பந்த அடிப்படையில் 15 ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு 2006 ஏப்ரல் 10 ஆம் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 28 இன் பிரகாரம் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே 2003 மே 05 ஆம் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 18 இன் 4.3 பிரிவின் பிரகாரம்

அமைய, தற்காலிக, ஒப்பந்த, நாளாந்த சம்பளம் பெறும் ஊழியர்கள் அரச சேவை சேமலாப நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தொழில் கொள்வோர் மற்றும் தொழிலாளரால் முறையே 12% மற்றும் 8% படி இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும், திணைக்களத்தின் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களின் மாதாந்தக் கொடுப்பனவு அடிப்படையில் பங்களிப்புத் தொகையை அறவிட்டு, அரசின் பங்களிப்புடன் அரச சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 94 பேராக இருந்ததுடன், அது தற்போது 28 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1982 இல் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். அது வரை 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் 12,000 ஆக இருந்தன. எனினும் 2010 ஆகஸ்ட் 01 ஆம் திகதி வரையில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் 81,323 வரை அதிகரித்திருந்ததுடன், ஆண்டொன்றிற்கு 5000 கம்பனிகள் புதிதாகப் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 1982 இல் காணப்பட்ட பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் வழமையான வேலை அளவுகள் 07 மடங்கினால் அதிகரித்திருந்த போதிலும், அதற்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, கட்டமைப்பு ரீதியாக அதிகரித்துக் கொள்வதற்கு போதியளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 ஒதுக்கீட்டு தலைப்பு 299 - இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 செப்தம்பர் 19 ஆம் திகதி தேசிய புலமைச் சொத்துப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது.

கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 4.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர்களனது பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தர்களினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் அல்லது இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்புக்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 4.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்கள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

## 4.4 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| பதவியினர் வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | நிறைவேற்று மட்டம் | 07 | 03 | 04 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 03 | 03 | - | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 45 | 29 | 16 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 10 | 10 | - | - |
| (v) | ஏனைய(அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை | - | 10 | - | 10 |
| | மொத்தம் | 65 | 55 | 20 | 10 |

## 5 ஒதுக்கீட்டு தலைப்பு 303 - புடவைக் கைத்தொழில் திணைக்களம்

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 நவம்பர் 22 ஆம் திகதி புடவைக் கைத்தொழில் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு

| | சொத்துக்களின் வகை | அளவு | சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| | | ஹெக்டேயார் | | |
| (i) | காணி | 0.6915 | தனியார் கம்பனியொன்று | 07 ஆண்டுகள் |
| (ii) | கட்டிடங்கள் | 05 | | |

## 5.5 செயலாற்றல்

2010 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(அ) கைத்தறி புடவைக் கைத்தொழில் அபிவிருத்திக்குரிய கொள்கைகளைத் தயாரித்தல்

(ஆ) உற்பத்தி அபிவிருத்தி நோக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல்
தொழில் முயற்சியாளர்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
வடிவமைப்பு தயாரிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

### (ஆ) பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள் (நோக்கத்திலிருந்து விலகியமை)

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கும் விடயப் பரப்பிற்கும் உட்படாத கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள புடவைக் கைத்தொழில் பிரிவிற்கு கட்டிடமொன்றை வழங்குவதற்காக விளம்பரமொன்றை பத்திரிகையில் வெளியிடுவதற்காக புடவைக் கைத்தொழில்

திணைக்களத்தினால் 2010 சனவரி 07 ஆம் திகதி ரூபா 53,580 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 5.6 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தலின் குறைபாடுகள்

**சீராக்கம் செய்யப்பட வேண்டிய நிலுவை**

2010 திசெம்பர் 31 இல் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காணப்பட்ட வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவுக்கு முன்வைக்கப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட காசோலைகளின் பெறுமதி ரூபா 15,095 ஆக இருந்தன.

## 5.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

**அரசாங்க சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கட்டுபெத்த தொகுதியில் உள்ள ஆதனங்களில் 05 கட்டிடங்கள் உட்பட 0.6915 ஹெக்டேயர் காணி, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் 1999 யூலை 30 ஆம் திகதி மற்றும் 99/1260/13/037 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திர திருத்தத்தின் பிரகாரம் நீண்டகால குத்தகை அடிப்படையில் புதிய முயற்சியாளர்களை உருவாக்கும் நிலையம் (புதிய பூமி) என்ற பெயரிலான செயற்திட்டமொன்றின் நடவடிக்கைகளுக்கு 2001 மார்ச் 14 ஆம் திகதிய காணி ஆணையாளரினால் மொரட்டுவ பிரதேச செயலாளருக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) மேற்படி செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட தனியார் கம்பனி, அரசிற்கு எவ்வித குத்தகையையும் செலுத்தாமல் இருந்ததாகவும் அதன் செயற்பாடுகள் எதுவும் ஆரம்பிக்கப்படாதிருப்பதாகவும் மொறட்டுவ பிரதேச செயலாளரின் 2008 பெப்ரவரி 05 ஆம் திகதிய 1/7/2/65 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன், கணக்காய்வுச் சந்தர்ப்பத்தின் போது எவ்வித நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கட்டுபெத்த தொகுதியைப் பரிசோதித்த போது கைத்தறி இயந்திரங்கள் உட்பட புடவைக் கைத்தொழிலுக்குத் அவசியமான பயன்படுத்தமுடியாத 16 உபகரணங்களை கைதவிர்க்காமல் அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிக்காமல் களஞ்சியத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

**(இ) வாகனத் திருத்தமும் பராமரிப்பும்**

(i) திருத்தங்களுக்காக மதிப்பீடுகளை சமர்ப்பிக்கும் போது அதில் எவ்வித நிபந்தனைகளும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வாகனங்களைப் பழுதுபார்த்ததன் பின்னர் அகற்றப்படுகின்ற உதிரிப்பாகங்கள் மற்றும் டயர்களை மாற்றும் போது, அகற்றப்படும் டயர்களை களஞ்சியத்திற்குப் பொறுப்பேற்றல் தொடர்பாக பொறுப்பேற்றல் பதிவேடொன்றிலோ அல்லது இருப்பு குறிப்புக்களோ பேணப்பட்டிருக்கவில்லை. இதனால் அச்செயற்பாடு உரிய வகையில் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியவில்லை.

## 5.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | நிறைவேற்று மட்டம் | 11 | 3 | 8 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 2 | 1 | 1 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 206 | 103 | 103 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 33 | 30 | 03 | - |
| (v) | ஏனைய(அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | | 9 | - | 9 |
| | | 252 | 146 | 115 | 9 |

## 5.11 உள்ளகக் கட்டுப்பாடு

**உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அமைச்சின் மூலம் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.